15th February 1958]

Commercial Crops

* 143 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the names of districts where regulated markets have been established or proposed to be established for various commercial crops?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Regulated markets have been established in Coimbatore district in respect of cotton, groundnut, tobacco and turmeric, in South Arcot district in respect of groundnut, cotton and gingelly, in North Arcot district in respect of groundnut, and in Tirunelveli district in respect of cotton. Regulated markets for groundnut and tobacco in Tiruchirappalli district are also expected to be set up shortly.

Sri N. K. PALANISAMI : இந்த மார்க்கெட்டுகளில் பருத்தி, கடலை முதலிய பொருள்களை கமிஷனுக்குத்தான் விற்றுக்கொடுக்கிறார்கள். அப்படியில்லாமல் இந்த மார்க்கெட்டுகளில் அவைகளை வாங்கி விற்றுக்கொடுக்கும்படியான அளவில் செய்தால்தான் இது வெற்றிகரமாக நடக்கும். இம்மாதிரி திருத்தம் கொண்டு வருவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சில நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிட்டி இந்த மார்க்கெடிங் விஷயத்தைப்பற்றி பரிசீலனைசெய்து சிபார்சுகளை அனுப்பியிருக்கிறது. அந்த சிபார்சுகள் இப்பொழுது கவனிக்கப்பட்டு ஒவ்வொன்றாக அமுலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

Mr. SPEAKER : Next question, No. 144.

The Hon. Sri R. VENKATARAMAN : I would request that this question may be postponed.

Mr. SPEAKER : To next session? I have got a copy of the answer with me.

The Hon. Sri R. VENKATARAMAN : To next sitting* because I have not got the file with me. It has not been circulated to me.

Air Ports

* 145 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any new air port is proposed to be opened in the State; and

(*b*) whether any shuttle air service is proposed to be run in the State connecting the major towns?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir.

Sri A. GOVINDASAMY : ஏற்கனவே உளுந்தூர்பேட்டையில் விமான நிலையம் இருக்கிறது. அடிக்கடி மந்திரிகள் அந்தப் பக்கம் போகிறார்கள். அதை புதுப்பிப்பதற்கு நமது அரசாங்கம் முயற்சிக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இம்மாதிரி ஏற்கனவே அமைக்கப்பட்ட விமான நிலையங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளையெல்லாம் நாம் எடுத்துக்கொள்ளுவது சாத்தியமல்ல. எந்த அளவுக்கு அவசியமோ அந்த அளவுக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

* The question was answered on 4th March 1958.

[15th February 1958

SRI S. NAGARAJA MONIGAR : எத்தனையோ துறைகளிலே நாம் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம். அம்மாதிரி விமான நிலையங்கள் நாட்டில் அதிகமாக தேவையாக இருக்கும்பொழுது அதில் நாம் எந்தவிதமான முன்னேற்றமும் அடையவேண்டாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விமான நிலையங்கள் அமைப்பதிலும், விமானத்தில் பறப்பதிலும் முன்னேற்றம் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் நமக்கு எவ்வளவு தேவையோ அந்த அளவுக்குத்தான் கவனித்து எடுத்துக்கொள்ளப்படும்.

SRI M. KANDASAMI PADAYACHI : நெய்வேலியில் விஞ்ஞானிகளெல்லாம் வந்து இறங்கவேண்டியிருக்கிறது. ஆகையால் அங்கு விமான நிலையம் அவசியம். அதை மறுபடியும் திறப்பதற்கு யோசனை உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுதுகூட அந்த விமான நிலையத்தில் இறங்கலாம். நம் பிரதம மந்திரிகூட அதிலே இறங்கித்தான் நெய்வேலிக்குச் சென்றார்கள்.

SRI N. R. THIAGARAJAN : மதுரை ஒரு முக்கியமான நகரம். அதற்கு ஏற்கனவே விமானப் போக்குவரத்து இருந்தது. ஆதலால் அந்த விமான நிலையத்தை தயவு செய்து சர்க்கார் கவனிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏர் லைன்ஸ் கார்பரேஷனோ அல்லது மற்றவர்களோ சர்வீஸ் நடத்துவதற்கு முன்வந்தால் நாம் அதற்கு வேண்டிய ஆதரவு அளிக்கலாம்.

Employment Exchanges

* 146 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to State whether recruitment is made by private factories through the Employment Exchanges in the respective districts?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not obligatory on the part of the private factories to recruit their man-power requirements through the Employment Exchanges. However, the services of the District Employment Offices in the districts are generally being made use of by a few private factories, purely on the basis of their good-will and co-operation.

SRI A. A. RASHEED : What is the total number of persons registered and what is the total number of persons who have secured employment?

THE HON. SRI R. VENKATARAMAN : I want a separate question to be put.

SRI P. S. CHINNADURAI : வேலை வாய்ப்பிலே தடையும் ஊழலும் ஒழிவதற்கு இம்மாதிரியான வேலை தேடித்தரும் ஸ்தாபனங்கள் பயன்படுமாகையால், இந்த ஸ்தாபனங்கள் மூலமாக புதிய தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர்களை எடுக்கவேண்டுமென்று சர்க்கார் சட்டம் கொண்டு வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த விஷயம் அகில இந்திய தொழிலாளர் கூட்டு மகாநாட்டில் விவாதிக்கப்படுகிறது. அங்கு ஏதாவது முடிவு ஏற்பட்டால் அதற்கு மேற்கொண்டு சட்டம் மத்திய சர்க்கார் இயற்றும். ராஜ்ய சர்க்கார் இது விஷயத்தில் சட்டம் இயற்றுவது என்பது இயலாது.